ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

අති විශෙෂ அதிவிசேஷமானது EXTRAORDINARY

අංක 916/7 – 1996 මාර්තු 27 වැනි බදාදා – 1996.03.27
916/7 ஆம் இலக்கம் — 1996 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை
No. 916/7 – WEDNESDAY, MARCH 27, 1996

(ආණ්ඩුවේ බලය පිට ප්‍රසිද්ධ කරන ලදී.) (அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது) (Published by Authority)

# I වැනි කොටස : (I) වැනි ඡෙදය—සාමාන්‍ය

# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.– பி. 21/78 IV.

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பதிரன ஆகிய நான், 'பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள்' சட்டத்தின் 24 அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரியைத் தாபிக்கின்றதும், 1995 யூலை 26 ஆந் தேதிய 881/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை 1996 மே 15 ஆம் தேதியிலிருந்து இக்கட்டளை மூலம் இல்லாதொழிக்கின்றேன்.

ரிச்சார்ட் பதிரன,
கல்வி, உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
1996 மாச்சு 27.

04 – 293/1

ச.வ.– பி. 21/78 IV.

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

### 21 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பதிரன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன், இக்கட்டளை மூலம் –

(அ) கலைகளும் பண்பாடும், முகாமையும் வர்த்தகமும், பிரயோக விஞ்ஞானங்கள் என்பவற்றின் கற்கைக் கிளைகளில் உயர் கல்வியை வழங்குதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்ற நோக்கத்துக்காக, 1996 மே 15 ஆம் தேதியிலிருந்து பல்கலைக்கழகமொன்றைத் தாபிக்கின்றேன் ;

(ஆ) அத்தகைய பல்கலைக்கழகத்துக்கு "இலங்கை தென்கிழக்கு பலகலைக்கழகம்" என்ற பெயர் மகுடத்தைக் குறித்தொதுக்குகின்றேன் ;

(இ) அத்தகைய பல்கலைக்கழகத்தின் அமைவிடம் அம்பாறை நிருவாக மாவட்டத்தில் இருத்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன் ;

(ஈ) கலைகளும் பண்பாடும், முகாமையும் வர்த்தகமும், பிரயோக விஞ்ஞானங்கள் என்ற துறைகளை அத்தகைய பல்கலைக்கழகத்துக்குக் குறித்தொதுக்குகின்றேன் ; அத்துடன்

(உ) இதற்கான 1 ஆம் நிரையில் தரப்பட்டுள்ள அத்தகைய பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறையும் அவ்வட்டவணையின் 2 ஆம் நிரையில் நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள கற்கைப் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன்.

ரிச்சார்ட் பதிரன,
கல்வி, உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
1996 மாச்சு 27.

### அட்டவணை

| நிரை 1 | நிரை 2 |
|---|---|
| கலைகளும் பண்பாடும் பற்றிய துறை | சமூக விஞ்ஞானங்கள் பகுதி<br>மொழிப் பகுதி |
| முகாமையும் வர்த்தகமும் பற்றிய துறை | முகாமைப் பகுதி<br>கணக்கியல், நிதிப் பகுதி |
| பிரயோக விஞ்ஞானங்கள் பற்றிய துறை | உயிரியல் விஞ்ஞானங்கள் பகுதி<br>பௌதீக விஞ்ஞானங்கள் பகுதி<br>கணித விஞ்ஞானங்கள் பகுதி |